Reg. M. 2330

ப 2
MADRA

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 41	பிலவங்கவருஷ ஆடி 1967 ஜூலை	இதழ் 7

மெய்கண்டாரும்—
மனவாசகங்கடந்தாரும்

(காலம்பற்றிய ஓர் ஐயக்குறிப்பு)

ஆசிரியர்.

உமாபதி சிவாசாரியர் சங்கற்ப நிராகரணத்தைச் சகம் 1235இல் செய்தார் என்ற குறிப்பு அந்நூலில் காணப்படுகிறது. இது கி. பி. 1313 ஆகும். இது ஒன்று தான் சாத்திரங்கள் சம்பந்தமாக மிகவும் திட்டமாய்த் தெரிந்தகாலம்.

சாத்திரம் அச்சிட்டவர்கள் 14 சாத்திரங்களுக்கும் பின்வருமாறு காலம் குறித்திருக்கிறார்கள் :

திரு உந்தியார்	கி. பி.	1148
திருக்களிற்றுப்படியார்	,,	1178
சிவஞான போதம்	,,	1223
சிவஞான சித்தியார்	,,	1253
இருபா இருபது	,,	1254
உண்மை விளக்கம்	,,	1255

சிவப்பிரகாசம் கி. பி. 1306 பிற சித்தாந்த நூல்கள் ஏழும் ஒவ்வோர் ஆண்டு வீதம் சொல்லி, சங்கற்ப நிரா

கரணத்திற்கு 1313 என்று கணக்கிட்டு முடித்திருக்கிறார்கள். இந்த அட்டவணைக்கு மூலம், சங்கற்ப நிராகரணமேயன்றி வேறு ஆதாரம் எதுவும் இல்லை.

இனி, மெய்கண்டாருடைய காலம் மேலே குறிப்பிட்டது சரிதான் என்பதற்கு ஒரு கல்வெட்டுச் சான்று காட்டுகிறார்கள். வட ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள திருவண்ணாமலையில் அருணாசலேசுரர் கோயில் வடக்கு மதிலில் இக்கல்வெட்டு காணப்படுகிறது.

'ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு 16 ஆவது இருஷடநாயிற்று இருபத்தெட்டாந் தியதியும் சனிக்கிழமையும் பெற்ற மிருகசீரிஷத்து நாள் உடையார் திருவண்ணாமலையுடைய நாயனார் கோயில் சீமாகேஸ்வரக் கண்காணி செய்வார்களும் தேவர்கன்மி கோயிற் கணக்கனும் திருவெண்ணெய் நல்லூருடையான் மெய்கண்ட தேவன் ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்க்குக் கல்வெட்டிக் கொடுத்த பரிசாவது இந்நாயனார் தேவதானம் செங்குன்ற நாட்டு மாத்தூரான இராசராச நல்லூரில் இவர் வெட்டுவித்த மெய்கண்ட தேவப் புத்தேரிக்குக் கடமையிறுக்குமிடத்து திருத்தின ஆண்டு குழி நாழியும் பாடிகாவலும் கொள்ளக் கடவதாகவும், இதன் எதிராமாண்டு கால்வரிசையும் பாடிகாவலும் இறுக்கக் கடவதாகவும் இதன் எதிராம் ஆண்டு முதல் காலே அரைக்கால் வரிசையும் பாடிகாவலும் உட்பட வேலி எண்பதின் கலம் இறுக்கக் கடவதாகவும், இவ்வேந்தலுக்கு எல்லை அரசுக்குக் கிழக்கு நீரேறின நிலம் திருத்திப் பயிர் செய்யக்கடவதாகவும், இவ்வேந்தலுக்கு புன்செய் நிலம் அரசுக்குக் கிழக்குத் திருக்கோவலூர் பெருவழிக்கு வடக்கு இவ்வேந்தலைச் சூழ்ந்த நிலததலே அஞ்சுவேலி தரை எல்லையாய் பண்டாரத்துக்குக் கடமை இறுக்கக் கடவதாகவும் இவ்வேந்தலில் திருத்தப்பட்ட நிலத்திலே இவ்விராசராச நல்லூரில் எழுந்தருளுவிக்கிற உடையார் மெய்கண்டீசுவரமுடைய நாயனார்க்குப் பூசைக்கும் அமுதுபடிக்கும் மூன்றில் ஒன்று

தேவதானமாகவும் இவ்வேரிக்கு ஏரிப்பட்டி மன்றுட்டுப் பட்டியுமாக ஐந்நூறு குழி விடக்கடவதாகவும் இவ்வேந்தல் தம் பொருளிட்டு வெட்டுகிற நிலம் இவ்வேரியும் நிலமும் குடிநீங்கா தேவதானமாய் இவர்க்குச் சந்திராதித்த வரையும் காணியாய் விற்றொற்றிப் பரிக்கிரகஞ் செல்லக்கடவதாகவும், இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் கொடுத்தோம் இவ்வனைவோம். இது பன்மாஹேஸ்வர ரக்ஷை".

இதிலிருந்து ஆராய்ச்சியாளர் பின்கண்ட செய்தியைக் கூறுகிறார்கள். இக்கல்வெட்டு மூன்றும் இராசராச சோழன் காலத்தில் கி. பி. 1232இல் எழுந்தது. இதனால் அறிவது திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட தேவர் என்பவர் தம்மூருக்கு அருகிலுள்ள திருவண்ணமலையில் மெய்கண்டேச்சுரம் என்று தம்முடைய பெயரால் ஒரு சிவமூர்த்தத்தை எழுந்தருளச் செய்து அதன் பூசைக்காக ஐந்து வேலி நிலம் ஏற்பாடு செய்தார். இராசராச நல்லூரில் மெய்கண்ட தேவப் புத்தேரி என ஓர் ஏரி வெட்டுவித்தார். இவருடைய பெயர் 'ஊருடைய பெருமாளான எடுத்தது வலியவேளார்! இவரே சிவஞான போதம் செய்த மெய்கண்ட தேவர் என்பது பிறர் கூற்று. இக்கருத்தைச் சிறிது நாம் ஆராய்வது பொருத்தமாகும்.

உமாபதியார் காலம் 1313 எனவே அவருக்கு மூன்று தலைமுறை முந்தியவரான மெய்கண்ட தேவருடைய காலம், தலைமுறைக்கு 25 ஆண்டு வீதம் கணக்கிட்டால் சுமார் 1237ஆகும். இது மேலே மெய்கண்ட தேவர் பெயரால் வந்த சாசனத்தின் காலம் 1232 என்பதற்கும் பொருத்தமாகிறது. ஆகவே சிவஞான போதம் பாடிய மெய்கண்ட தேவர் இவரே. அவர் மாணக்கரான அருணந்தி சிவசாரியரும் மனவாசகங் கடந்தாரும் இதே நூற்றாண்டில் இருந்தவர்கள். ஆகவே இவர்கள் நூலுக்குத் தொடக்கத்தில் குறிப்பிட்ட காலமானது பெரிதும் பொருந்தக் கூடியதே.

இவ்வாறு செய்தவரையறை இதுவரையில் இலக்கிய வரலாறு எழுதினோரும் ஆராய்ச்சியாளரும் அப்படியே

ஏற்றுக்கொண்ட செய்தி. எனினும், இக் காலவரையறையை நாம் ஒப்புக்கொள்வதில் சில ஐயங்கள் எழுகின்றன. முதலாவதாக இந்தச் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மெய்கண்ட தேவரே சிவஞானபோதம் பாடியவர் என்பதற்குச் சான்று எதுவும் இல்லை. இவர் பெயர், ''ஊருடைய பெருமாளான எடுத்தது வலிய வேளார்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவருடைய தந்தையைப் பற்றிய பேச்சே இங்கு இல்லை. அன்றியும் இவர் மெய்கண்டேச்சுவரம் என்ற ஒரு சிவாலயம் அமைத்தார் என்றும், அதற்கு ஐந்து வேலி நிலம் வழங்கினர் என்றும் சொல்லப்பட்டுள்ளது. மெய் கண்டாரின் தந்தை பிரசித்தமான பெயருடைய அச்சுதகளப்பாளர். மெய்கண்டாரே தம் பெயரால் ஒரு கோயில்எடுத்தார் என்பதுஆராயத் தகுந்த செய்தி அரசர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்களே யன்றி, ஏனையோரில் பின் வந்தோர், முன் வந்தோர் பெயரில் கோயில் எடுப்பது மரபு. மெய்கண்டார், கோயில் கணக்கர் என்று சொல்லப்பட்டுள்ளது. (இவ்வையங்களை முதன் முதலில் எழுப்பியவர் ஸ்ரீ கோதண்டபாணிப் பிள்ளையவர்கள்.) இக்கருத்துக்கள் மரபாக வழங்கிவரும் மெய்கண்டார் வரலாற்றுக்கு வேறாக உள்ளன. எனவே இம் மெய்கண்ட தேவர் சாத்திரம் பாடிய மெய்கண்டாருக்குப் பின் வந்தவராக இருத்தல் கூடுமா என்ற எண்ணம் எழுகிறது.

திருவதிகை மனவாசகம் கடந்தார் வரலாறும் இது போன்றதே. இவர் பெயரால் திருவதிகைத் தெற்கு வீதியில் ஒரு மடம் இருக்கிறது. விக்கிரம சோழனுடைய ஆறும் ஆண்டுக் கல்வெட்டுப் பின்வருமாறு கூறுகிறது. (கி. பி. 1124): ஸ்வஸ்தி ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு பிரம்ம தேசம் காய்வான் தண்டலமாகிய சதுர்வேதி மங்கலத்து......பள்ளீசுர முடையார்க்கு அர்ச்சனைக்கும் அமுதுபடிக்கும் நிமந்தமில்லாமையால் திருப்பணி செய்கிற ஆண்டார் மனவாசகங்கடந்தார் எங்களிடையில் விலையிட்டுக் கொண்ட பூமியாவது'' எனவே, இங்கு ஒரு சிவபக்தர் மனவாசகம் கடந்தார் என்பவர் இருந்தார் என்று தெரிகிறது. இவர் காலம், உண்மை விளக்க

மனவாசகம் கடந்தாருக்கு நாம் வரையறை செய்த காலத்துக்கு (1255) 130 ஆண்டுகள் முற்பட்டது என்றும் தெரிகிறது. இவரும் திருவதிகை என்பதனால் குழப்பம் ஏற்படுகிறது. இவரே உண்மை விளக்கம் செய்தவராகவும் இருக்கலாம். ஆனால் ஆராய்ச்சியாளர் அனைவரும் அடுத்த நூற்றாண்டையே அவர் காலமாகக் கொள்கிறார்கள். இதற்கு ஆதாரம் இல்லை. ஆதலால் மெய்கண்டார் மனவாசகங் கடந்தார் இருவர் காலத்தையும் நன்கு நுனித்து ஆராயும்போது, இன்று ஒப்புக்கொள்ளுகின்ற காலத்திற்கு இவ்விருவரும் முற்பட்டவர்கள் என்று கருத இடமுண்டு.

மற்றோர் உண்மையும் உளங்கொள்ளத் தக்கது. மெய்கண்டார் இளமையில் திருவருளால் உபதேசம் பெற்றார். ஆனால் இளமையில் இறைவனடி சேர்ந்தார் என்பதாக வரலாறு இல்லை. இவர் திருவெண்ணெய் நல்லூரில் நெடுங்காலம் சிவானந்த நிட்டையில் வீற்றிருந்தார் என்று கூறுகிறார்கள். வைணவமரபில் ஆசாரியர்கள் நீண்ட ஆயுளோடு வாழ்ந்தார்கள் என்று சொல்வர். இராமானுஜர் நூற்று இருபது திருநட்சத்திரம். உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, பெரிய நம்பி, எம்பார், நஞ்சீயர், திருவாய்மொழிப்பிள்ளை முதலியோர் 105 திருநட்சத்திரம்; நம்பிள்ளை, பெரியவாச்சான் பிள்ளை 95, வைணவ வரலாற்றில் பட்டர் ஒருவரே குறைந்த ஆயுள் 28. இவ்வாறு நோக்குங்கால் சைவ ஆசாரியர்களும் நீண்ட ஆயுள் பெற்றிருந்தார்கள் எனக் கொள்வது முறையாகும். அச்சுத களப்பாளருடைய குருவாக இருந்த சகலாகம பண்டிதர், களப்பாளரைத் திருவெண்காட்டு இறைவனிடத்தில் ஆற்றுப்படுத்தி மெய்கண்டார் அவதரித்த பின் அவருக்கு மாணாக்கராகி அவர் முத்தியடைந்த பின்னர் வாழ்ந்திருந்து சைவசித்தாந்தப் பெரும் சாத்திரமாகிய சிவஞான சித்தியார் பரபக்கம் சுபக்கம் என்ற இரண்டையும் பாடி, பின் மறைஞான சம்பந்தரை ஆசாரியப் பதவியில் இருத்திச் சிவபரம் பொருளில் கலந்தார் என்று நாம் பேசும்போது, இவருடைய ஆயுள் மிக நீண்டதாயிருக்க வேண்டும். இவர் நூற்று இருபது நட்சத்திரத்திற்குமேல் வாழ்ந்தார்

என்று கொள்வது பிழையாகாது. நம் முன்னோர் இகத்தை முனிந்து பரமே பார்த்திருந்தவர்களாதலால், ஆசாரியர்கள் வரலாற்றை விரிவாக எழுதிவைக்க வில்லை. எழுதிவைத்திருந்தால் இதை நாம் விளங்க அறியமுடியும். இவ்வாறு பார்க்கும்போது, கி. பி. 1124இல் வாழ்ந்த மன வாசகம் கடந்தார் உண்மை விளக்கம் செய்தவராக இருத்தல் கூடியதே. அப்படியானல் அவர் குருவாகிய மெய் கண்டார் காலமும் கி. பி. 1100க்கு மிக முற்பட்டிருக்கும். உமாபதியார் கி. பி. 1313 சங்கற்ப நிராகரணம் செய்தது உறுதி. மறைஞான சம்பந்தர் 1175—1275; அவர் குருவாகிய அருள் நந்தி 1080—1200; இதுவே மனவாசகம் கடந்தார் காலமாக இருக்கலாம். இதை மறுப்பதற்கு இல்லை.

மேற்குறித்த கால எல்லையை, நம் ஆசாரியர்கள் காலம் எவ்வளவு பழமையாக இருந்திருத்தல் கூடும் என்பதைச் சுட்டிக்காட்டவே குறிப்பிட்டோம். இது முடிவான வார்த்தையன்று, மெய்கண்டார்—அருணந்தி—மனவாசகங்கடந்தார் மூவரும் பதின்மூன்றும் நூற்றுண்டு என்பது மரபு. இந்த மரபுணர்ச்சியை இப்போது நாம் குலைக்க விரும்பவில்லை. இருப்பினும், இந்த நெறியில் ஆராய்ச்சியாளர் மனம் பின்னும் செல்லத்தக்கது என்பதற்காகவே இவ்விளக்கம் தந்திருக்கிறோம்.

———o———

காருட்டு முள்ளூர்

—(மு. அ.)—

இடம்: தென்னார்க்காடு ஜில்லாவில் சிதம்பரத்திலிருந்து தென் மேற்காகச் சுமார் 14 மைலில் உள்ள தலம். இங்கிருந்து ஒரு மைல் தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரை. எதிரில் தென்கரையில் மண்ணிப் படிக்கரை என்ற தலம் உள்ளது. மேற்கே இரண்டு மைலில் திரு ஓமாம்புலியூர்.

பெயர் : இது காஞட்டாம்புலியூர் என்று வழங்குகிறது. காஞட்டு முள்ளூர் என்ற பெயர் இவ்வாறு மருவியிருக்கலாம். பெயர்ப் பொருத்தத்தைப் பின்னே கல்வெட்டு என்னும் தலைப்பில் சிறிது ஆராய்வோம். இங்கு சுவாமி திருநாமம் பதஞ்சலி ஈசுவரர். அம்பிகைக்குக் காஞர்குழலி, திரிபுரசுந்தரி, கோல்வளைக்கை அம்மை, அப்புசாட்சி என்ற பெயர்கள் உள்ளன. தல விருட்சம் மதூகம் என்ற இருப்பை; சிவதீர்த்தம், கொள்ளிட தீர்த்தம். 'கொள்ளிடத்தின் கரைமேல் காஞட்டு முள்ளூர்' என்று சுந்தரர் பாடுகிருர்.

கோயில் : மிகவும் சிலமாகப் பரிதாபமான நிலையில் உள்ளமை வருந்தத்தக்கது; சிறிய கோபுரம். அதன்மேல் மரங்கள் முளைத்துள்ளன. தெற்கு மேற்கு மதில் சுவர்கள் நல்ல நிலைமையில் உள்ளன. வட சுவரும் கீழ்ப்புறம் மடைப்பள்ளி முதலியனவும் ஈசானிய திசையிலுள்ள மண்டபமும் மிகவும் சிலம். சந்நிதியில் உள்வாயில் வரை நீண்ட மூன்று பிரிவாய்உள்ளது வெளவால்நெற்றி மண்டபம். இதில் தென்புற மண்டபம் முழுமையும் இடித்து எடுக்கப்பட்டு விட்டது. வெளிப்பிரகாரம் முள்ளும் பூண்டும் நிறைந்து நடக்க முடியாத நிலையில் உள்ளது. ஈசானிய திசையில் கிணறு, சுவாமி கோயில், அம்பாள் கோயில், மண்டபங்கள் யாவும் கற்கோயில். உள் பிரகாரத்தில் திருமாளிகைச் சுற்று அதன் அங்கங்களோடு உள்ளது; நாற்புறமும் மண்டபமாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு கஜலட்சுமிக்குக் கிழக்கில் பள்ளியறை தனியாக அமைக்கப்பட்டுள்ளது.

இது காவிரி வடகரைத் தலங்களில் 32 ஆவது.

மூர்த்தி : வாயிலில் கோபுரத்துக்கும் வெளியே சிறிய கோயிலில் விநாயகர், தென்புறம். உட்புறம் வெளவால் நெற்றி மண்டபம் முடியுமிடத்தில் வாயிலில் வடபுறம் பால தண்டாயுதபாணி. உட்பிரகாரத்தில் மாணிக்கவாசகர் இல்லை, மற்ற மூவர் உள்ளனர். கோட்டங்களில் நர்த்தன கணபதி, தக்ஷிணமூர்த்தி சனகாதியரோடு; பின்புறம் திரு

மால்; வடபுறம் பிரமன்; எதிரில் பைரவர், சூரியன். பின் திருமாளிகைச் சுற்றில் நிருதி விநாயகர், தேவியரோடு கூடிய முருகன், விசுவநாதர், கஜலக்ஷ்மி, விசாலாட்சி உள்ளனர். மூலவர் வாயிலில் விநாயகர் இரண்டு திருவுரு, பதஞ்சலிசிலை. சுவாமி மூலவர் மிகவும் சிறிய திருவுரு. அம்பாள் கோயில் வழக்கம் போல் சந்நிதியில் தெற்கு நோக்கி, ஆனால் வெளிப் பிரகாரத்தில் தனியே நீண்டுள்ளது. அம்பாள் சிறிய திரு உரு-வட கோட்டத்தில் பராசக்தி சிலை.

உற்சவ மூர்த்திகள் : எல்லா மூர்த்திகளும் உள்ள னர். மிகமிகத் திருத்தமாக உள்ளனர். பாலதண்டாயுத பாணியும், பதஞ்சலியும், நால்வரும் உள்ளனர். நடராஜா அம்பிகை சிறிய உருவம். புதியவர் போல் தோற்றுகின்ற னர். சபையில் இருக்கிறார்.

பாடல் : சுந்தரமூர்த்தி—கொல்லிக் கௌவாணப் பண்ணில் பதினொரு பாடல்கள் கொண்ட மிகவும் அழகான பதிகம் உள்ளது. இதில் இயற்கை வருணனை மிகவும் சிறப் பாக அமைந்துள்ளது; பாடி அனுபவித்தற்குரியது. இத் தலத்தைத் தரிசிக்க 13–5–67 அன்று காலை 6 மணிக்கு எம் மூராகிய திருச்சிற்றம்பலத்திலிருந்து கொள்ளிடத்தின் தென்கரையை யடைந்து கொள்ளிடத்தில் இறங்கி ஆற்றைக் கடந்து வடகரை அடைய நேர்ந்தது. மொத்தம் 8 மைல். கொள்ளிடத்தில் கண்ட காட்சி 1200 வருடங்களுக்கு முன்னதாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கண்டு 'திரைவாய்க் கோல்வளையார் குடைந்தாடும் கொள்ளிடத்தின் கரைமேல்-கருபணிகள் போல் நீலம் மலர்கின்ற கழனிக் கானாட்டு முள் ளூர்' என்று பாடியது போலவே இன்றும் அமைந்துள்ளது.

—வான் பணியும்

கானூர் குழலியரும் கானாட்டு முள்ளூர் வாழ்
பால்நீ றணிந்த பதஞ்சலியே.

வரலாறு : சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாழ் கொளி புத்தூரை விட்டு நீங்கி, கானாட்டு முள்ளூரை

அடைந்த போது சிவபெருமான் எதிர் காட்சிக் கொடுக்கக் கண்டார். 'துணைப் பாதமலர் கண்டு தொழுதேன் என்று தமிழில் தொடைமாலை மலரைச் சாத்தினார்' என்பது பெரிய புராணம் கூறும் வரலாறு. இதனால் சுந்தரர் இந்தத் தலத் தினுள் புகவில்லை என்று கொண்டு இதை ஆதாரமாக வைத்து, சுந்தரர் இங்கு வந்த போது, இங்குள்ள இடமெல் லாம் மண்ணெல்லாம் சிவலிங்கமாகக் காட்சியளித்தது கண்டு, சுந்தரர் அடிவைக்க இடமில்லாமல் வெளியிலிருந்தே பாடினார் என்ற வரலாறு இவ்வூரார் கூறுகிறார்கள். அதற் கேற்ப இவ்வூருக்கு வடமொழியில் 'அத்ருஷ்ட மிருத்திகா க்ஷேத்திரம்' என்று பெயர் அமைந்ததாகச் சொல்கிறார் கள். (காணவியலாத மண்ணுடைய க்ஷேத்திரம்) வட மொழியிலுள்ள தல வரலாற்றைத் தமிழ் வசனமாக 1939 இல் அச்சிட்டார்கள். அதில் உள்ள செய்திகள்; இங்கு பதஞ்சலி முனிவர் வழிபட்டுப் பேறு பெற்ற காரணத்தால் சுவாமி பதஞ்சலீசுவரர் என்று பெயர் பெற்றார். பெருமான் இங்கு நந்திதேவருக்கு அருள் செய்த போது தலமெங்கும் லிங்கமாகக் காட்சியளித்தார். முத்தி பெற்றோர், அனேகர். கோயிலுக்கு எதிரிலுள்ளது சூரியபுஷ்கரணி என்ற தீர்த் தம். இத் தீர்த்தத்தில் முழுகினால் பிள்ளைப் பேறு அடை வர். பின்னும் ஐந்து தீர்த்தங்கள் உள்ளன.

நிர்வாகம்: 30 ஏக்கராவுக்குமேல் நிலம் உண்டு. இருந் தும் கோயில் சிறிதும் கவனிக்கப் படவேயில்லை. அரசாங் கத்தில் கோயில் திருப்பணிக்காக, 5000 ரூபாய் சில ஆண்டு களுக்கு முன் உதவி அனுமதித்தார்கள் என்றும், அதைப் பெற்று மேலும் பொருள் தேடி நன்முறையில் திருப்பணி செய்ய நிர்வாகத்தார் முயலவில்லை. என்றும் சொலலுகிறார் கள். இது மிகவும் வருந்த வேண்டிய செய்தி. இச்செய்தி யையும் அறிந்து சுந்தரர் தேவாரத்தில் கூறியுள்ள அழகை யும் படித்து, கோயில் நிலைமையும் பார்க்கும போது கண் ணீர் உகுக்க வேண்டியிருக்கிறது. அறநிலைய இலாகாவினர் தக்க நடவடிக்கை எடுத்துக் கோயிலைப் புதுப்பிக்க ஏற்பாடு

செய்வது சிவ புண்ணியமாகும். நாலு கால பூஜை நடக்கிறது.

விழா : முன்னொரு காலத்தில் நடந்தது. வாகனங்கள் உள்ளன.

கல்வெட்டு : இங்கு விக்கிரம சோழன், மூன்றும் வீரராசேந்திரன், இராசேந்திர சோழன் III ஆகியோர் கல்வெட்டுக்கள் உள்ளன. இவற்றால் இவ்வூர் விருதராச பயங்கர வளநாட்டுக கீழ்க்காநாட்டு முள்ளூராகிய திருச்சிற்றம்பலச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயருடையது என்று அறிகிறோம். மேற்காநாடு கீழ்க்கா நாடு என இரு பகுதிகள் இருந்தன. காநாட்டிலுள்ள புலியூர் ஆனமையால் காநாட்டம்புலியூர் என்று சொல்லுகிறார்கள். இக்கோயிலில் தக்ஷிணாமூர்த்தி வழிபாட்டுக்குச் சிறப்பான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, இக்காரணத்தால் தெரிகிறது.

குறிப்பு : விரைவில் கிலமாகிச் சீர்கேடடையும் கோயில்களில் இதுவும் ஒன்று. தன் இருப்பிடத்தை ஆண்டவனே அருள் கூர்ந்து திருத்திக் கொள்ளவேண்டும்.

சுவையான செய்திகள் சில

(கீ. இராமலிங்கம், எம். ஏ.,)

இவ்வாண்டு, சென்னை சைவ சித்தாந்த மகா சமாசத்தின் ஆண்டு விழாவும் சைவர் மாநாடும் திருச்சியில் மூன்று நாட்கள் நடைபெற்றன. மாநாட்டின் பகுதியான இளைஞர் மாநாட்டிற்குத் தலைமையமர, இராமநாதபுரம் மன்னர் இளவல், சைவத்திருவினர் ரா. காசிநாதத் துரை, எம் பி., அவர்கள் இரண்டாம் நாள், 31-12-1966 காலையே திருச்சிக்கு வருகைபுரிந்தார்கள். நண்பரொருவர் இல்லத்தில் சிவபூசையை முடித்துக்கொண்டு, மௌனமடத்திற்கு வந்தார்கள். அன்று பகல் அவர்களோடு அளவளாவி

மகிழும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடம் செவிமடுத்துக் களித்த சுவையான செய்திகள் சிலவற்றையே, மற்றரும் அறிந்து உவக்கும் வண்ணம், இங்கு எழுதுகிறேன்.

விவேகானந்த அடிகளாரைத் தமிழ்நாடுதான் அமெரிக்காவுக்கு அனுப்பியது என்பதைப் பலரும் அறிவர். திரு காசிநாதத் துரை அவர்கள் பாட்டனுர் திரு. பாசுகரச் சேதுபதி அவர்களே அடிகளாரை அயல் நாட்டுக்கு அனுப்ப ஊக்கமூட்டிப் பெருமுயற்சி எடுத்தவர்கள் என்பதும் பலருக்குத தெரியும். ஆனல், அடிகளார் அமெரிக்காவிலிருந்து சென்னைக்குத் திரும்பியதும், தமிழ் நாட்டு நுண்ணறிஞர்களைக் கண்டு அளவளாவ விரும்பினுர்கள் என்பதைப் பலர் அறிந்திரார். திரு. பாசுகரச் சேதுபதி அவர்களிடம் இவ்விருப்பத்தைத் திரு அடிகளார் தெரிவித்தார்கள். திரு. சேதுபதி அவர்கள் அடிகளாரை, சைவசித்தாந்தப் பேரறிஞர் திரு சோமசுந்தர நாயகர் அவர்களிடம் அழைத்துச் சென்றுர்கள். திரு நாயகர் அவர்களிடம், அடிகளார் திருநெறி பற்றி அளவளாவ அவாவுவதைத் திரு சேதுபதி அவர்கள் கூறினுர்கள். தமக்கு ஆங்கிலந் தெரியாததாலும், திரு அடிகளாருக்குத் தமிழ் புரியாததாலும், திரு நாயகர் அவர்கள், 'எப்படி அளவளாவ முடியும்?' என்றுர்கள்.

எனினும், அடிகளாரை ஒரு கேள்வி கேட்பதாகச் சொல்லி, 'பிரம்மம்' என்று சொல்கிறுர்களே அதன் பொருள் என்ன என்று வினவினுர்கள். திரு சேதுபதி அவர்கள் இதனை ஆங்கிலத்தில் கூற, திரு அடிகளார் ''இது என்ன, எளிதான கேள்வி'' என்று எண்ணி,'' 'பிரம்மம்' என்றுல் 'பெரியது', என்று விடை பகர்ந்தார்கள். உடனே, "இது சாலும், வெற்றி நமக்கே, சித்தாந்த சைவம் வென்றது'' என்று திரு நாயகர் அவர்கள் பகர்ந்தார்கள். இதனை ஆங்கிலத்தில் சொல்லக்கேட்ட அடிகளாருக்கு, ஏதுமே புரியவில்லை பின்னர், திரு சேதுபதி அவர்கள் விளக்க அறிந்து, திரு நாயகர் அவர்களின் திறத்தனையும், சைவத்தின் மாண்பையும் வியந்து போற்றினுர்கள்.

'பெரியது' என்றவுடனே, சிறியது ஒன்று உண்டு என்ற பொருள் கிடைத்துவிடுகிறது அல்லவா? 'பெரியது' என்பது இறைவனைக் குறிக்கும், 'சிறியது' என்பது உயிரைக் குறிப்பதாகிறது. உயிர் சிற்றறிவுடையதாக இருப்பதை நாம் காண்கிறோம். எனவே, தானே தன்னைப் பிறவிக்கு ஆட்படுத்திக்கொள்ள உயிரால் இயலாது என்பது புலனாகிறது. இறைவனுக்கும் உயிருக்கும் இடையில் நிற்பதே உலகம். இவ்வாறாக, உடையவன், உயிர், உலகம் என்னும் முப்பொருள்களும் உண்டு என்னும் உண்மையை அடிகளாரின் விடை வெளிப்படுத்துவதாயிற்று.

திரு. விவேகானந்த அடிகளார் திரு நல்லசாமிப்பிள்ளையவர்களையும் கண்டு அளவளாவினார்கள். அவர்களின் அறிவுச் செம்மையைப் பாராட்டினார்கள். திரு நாயகர் அவர்களையும் பார்த்து உரையாடிய பின்பே, திரு அடிகளார் "எனக்கு நூறு சென்னைவாசிகள் கிடைத்துவிட்டால் போதும், அமெரிக்கா முழுவதையும், மாற்றிவிடுவேன்" என்று விம்மிதத்துடன் கூறினார்களாம்.

திரு அடிகளார் அவர்கள், சென்னையில் மேலும் சில காலம் தங்கி, திரு நாயகர், திரு நல்லசாமிப் பிள்ளை, திரு பாசுகரச் சேதுபதி ஆகியவர்களுடன் திருநெறி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தால், மற்றக் கொள்கைகள், படிமுறையில் சைவத்திற்குக் கீழ் நிற்க, சைவத்தின் மேற் சமயம் வேறில்லை என்னும் உண்மையான முடிவுக்குவந்து, அதனை உலகம் அறிய விளம்பியிருப்பார்கள் என்பது திண்ணம்.

தம் தம் இனத்தில் தோன்றிய பேரறிஞர்களையாவது, அந்தந்த இனத்தவர்கள் சிறப்பாகப் போற்ற வேண்டும். அப்படிச் செய்வது அந்தந்த இனம் உயர்வதற்கு வழியாகும். அறிவின்மேதை திரு சோமசுந்தர நாயகர் அவர்கள் தோன்றிய இனத்தவர் ஒருவர், அப்போது திரு துரையவர்களைப் பார்க்க வந்தார். அவரை நோக்கி, 'திரு நாயகர் அவர்களை அறிவீர்களா?' என்று கேட்டார்கள்.

அவர் 'தெரியாது' என்றார். சைவ சித்தாந்தச் செய்திகளை அறிந்து வைத்துக் கொண்டிருக்கும் வேறு ஒருவரைப் பார்த்து இதே கேள்வியைக் கேட்டாலும், அவரும் இதே விடையைத் தானே தருகிறார் என்று திரு மன்னர் தம் இளவல் இரங்கினார்கள்.

நாட்டின் ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். நம்மிடையேயுள்ள இன வேறுபாடுகளைப் பெரிதாக்கிக் கொண்டு பிளவுபட்டுப் போகாமல் இருப்பதற்காக, நம் சமய குரவர்களில் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் பல் வேறு இனங்களிலுதித்த அடியவர்களை ஒருங்கு அமைத்துத் திருத்தொண்டத்தொகை பாடிவைத்தார்கள் அதை உணரும் நாம், அறுபத்துமூவர் குருபூசை கொண்டாடுகிற போதாவது, அறுபத்துமூன்று நாயன்மார்கட்கும் அந்தந்த இனத்தைச் சேர்ந்த அறுபத்துமூவரை ஒருங்கே வீற்றிருக்கச் செய்து, அவர்களை அறுபத்துமூன்று நாயன்மார்களாகவே கருதி வழிபட்டு, அமுது படைக்க வேண்டாவா? என்று கேட்டார்கள் திரு இளவரசர் அவர்கள்.

இனத்துக்கு இனம், இடையே திரை போட்டுக் கொண்டு உணவருந்தும் பழக்கம் இன்னமும் நீங்காமல் இருக்கின்றதே; நல்லெண்ணமுடைய ஒரு சிலர், பல இனத்தவரையும் இப்படி ஒன்றாக அமர்த்த முயன்றாலும், எப்படி அவர்கள் ஒரு சேர அமரப் போகின்றனர்? ஒன்றியிருந்து அமுது செய்யப் போகின்றனர்? என்று இரங்கியவர்களாய், 'எங்கள் மதுரை ஆதினம், திருஞானசம்பந்தர் மடம் ஒன்றில்தான் குருபூசைக் காலங்களிலும், இன வேறுபாடு கருதாமல், குருமகாசந்நிதானம் அவர்களுடன் எல்லா இனத்து அடியவர்களையும் ஒருங்கே அமர்த்தி, மகேசுவர பூசை நடத்தி, உணவு பரிமாறப் பெறுகின்றது' என்று விம்மிதமுற்றார்கள் திரு இளையமன்னர் அவர்கள்.

கன்னட நாட்டில், வீர சைவர்கள் அறுபத்து மூவருக்கும் அறுபத்து மூன்று வீர சைவர்களை வரிசையாக அமர்த்தி, அவர்களையே அறுபத்து மூவராகப் பாராட்டிக் குருபூசை வழிபாடு நடத்தும் வழக்கம் இருப்பதையும் திரு காசிநாதனார் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

மன்னர் மகனுர் திரு காசிநாத துரையவர்கள் இசைப் பயிற்சி கைவந்தவர்கள் மேடைகளில் அமர்ந்து முறைப் படி இசையரங்கு நடத்தும் ஆற்றல் வாய்ந்தவர்கள். இவ் வுண்மை சிலருக்குத் தெரிந்திருக்கக்கூடும். ஆனுல், எனக்கு இது வியப்பான செய்தியாகத்தானிருந்தது. கருநாடக இசையில் வல்லமை படைத்திருப்பதோடு, அதற்கு ஆதா ரமே தமிழ்ப் பண் இசைதான் என்பதை அவர்கள் இனிது உணர்ந்திருக்கிறுர்கள்.

திருமுறைப் பாடல்கள், திருப்புகழ்ப் பாடல்கள் சில வற்றை அவர்கள் அவ்வவற்றிற்குரிய பண்களில் பாடிக் காட்டினுர்கள். செவி குளிர்ந்து, உளங்குளிர்ந்து, இன்ப உணர்வில் திளைத்தேன். உயிரைப் பண்படுத்தக்கூடியது, பண் முறை தவருமல் அருட்பாடல்களைப் பாடுவதும், கேட்பதுந்தானே என்று எனக்குள்ளேயே எண்ணிக் கொண்டேன். அதே நேரத்தில், திரு இளவரசர் அவர் களும், பண் பாடக்கூடியவர்களே, பண்ணை உணர்பவர் களே பண்பாடுடையவர்கள் என்றுர்கள். உணர்வொத்த கருத்தினைக் கேட்டுச் செம்மாப்பு அடைந்தேன். பண் ணேடு திருமுறைப் பாடல்களைப் பாடவும், கேட்கவும் எனக்கு எப்போதும் வாய்ப்பு வாராதா என்றும் ஏக்கமுற லானேன்.

அருளிசைப் பாடல்களைப் பற்றிப் பேசிக் கொண்டி ருந்தபோது, மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய் துளள திருவெம்பாவைப் படால்கள், சையாம் நாட்டு மன் னரின் முடிசூட்டு விழாவில் பாடப் பெறுவதையும், அப்ப டியே 9 ஆம் திருமுறையில் உள்ள 'மன்னுகதில்லை' என் னும் பல்லாண்டுப் பாடலும். இசைக்கப் பெறுவதையும் இப்பாடல்கள் இரண்டினையும் அவர்கள் மொழியில் ஒலி பெயர்த்து எழுதி வைத்துக் கொண்டு வைத்திருப்பதை யும் பற்றி உரையாடினேம். அப்பொழுது திருப்பாவைப் பாடல்கள் முப்பதும் தெலுங்கு எழுத்தில் எழுதி வைத் துக் கொண்டு தெலுங்குப் பகுதியினர் பாடுவதைப் பற்றி யும் தாம் அறிந்ததாகத் திருமன்னர் இளவல் அவர்கள்

மொழிந்தார்கள். தெலுங்கு நெடுங் கணக்கில் 'ழ' எழுத்து இல்லை. 'மார்கழித் திங்கள் எனவரும் தொடரிலுள்ள 'ழ' எழுத்தைத் தமிழில் உச்சரிப்பது போலவே உச்சரிக்க கற்றுக் கொண்டும் வரி வடிவத்திலும் 'ழ' எழுத்தை அப்படியே தெலுங்குச் சொல்லின் இடையில் நுழைத்து எழுதிக் கொண்டும் வருவதையும் மன்னர் இளங்கோதான றல் சொன்னார்கள். பலர் இதனை அறிந்திருக்க மாட்டார் கள். திருப்பாவையை உள்ளிட்ட திவ்வியப் பிரந்தப் பாடல்கள் அனைத்தையும் தெலுங்கு எழுத்தில் அச்சிட்டு, தமிழ் தெரியாத தெலுங்கு மொழியினர் ஓதி வருகின்றனர் என்பதை முன்னாள் அறநிலைய அமைச்சர் திரு கே. வேங் கடசாமி நாயுடு அவர்கள் ஒருமுறை சொல்லக் கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். இங்கு இச்செய்திகளைக் குறிப்பது இவ்வுண்மைகளைப் பலரும் தெரிந்து கொள்ள வாய்ப்பா கும்.

திரு காசிநாதர் அவர்கள், மதுரை ஆதீன முதல்வ ராய, திருவருள்திரு. சோமசுந்தர ஞான சம்பந்த பரமா சாரிய சுவாமிகள் அவர்களை முதன்முதலில் இராமநாத புரத்தில் கண்டார்கள். பொதுவாக இக்காலத்தில் துறவு வேடம் பூண்டவர்கள் இருக்கும் நிலையை மனத்தில் கொண்டவர்களாய், திரு துரையவர்கள், திரு மகாசந்நி தானம் அவர்களைக் கண்டதுமே உளமாரப் போற்ற வில்லை. அன்று கோவிலில் குரு முதல்வர் அவர்களின் சொற்பொழிவு இருந்தது. அதற்கு ஓர் ஒலிபெருக்கி அமைக்கப் பட்டிருந்தது அன்றே மதுரை திரு சோம சுந்தரம் அவர்களின் பாட்டுக் கச்சேரி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கெனத் தனியே ஓர் ஒலி பெருக்கி வந்திருந்தது. ஆனால் அது செயற்படும் நிலையில் இல்லை. எனவே திரு இளமன்னர் அவர்கள் திரு சந்நி தானம் அவர்கள்பால் சென்று, 'தங்கள் பேச்சை அரை மணி நேரத்திற்குள் முடித்துக் கொள்ளுங்கள். ஒலி பெருக்கி இசையரங்குக்குத் தேவைப்படுகிறது' என்றார் கள். திரு சுவாமிகள் 'அப்படியே செய்வோம்' என்று அன்பு கனிந்து கூறியதே திரு மன்னர்தம் இளவலாருக்கு ஓரளவு மனமாற்றம் அளித்தது.

பின்னர் திரு குருபிரானுர் அவர்கள் உரை நிகழ்த்தியதையும், தனியே தம்மிடத்தில் தண்ணளியோடு சொல்லாடியதையும் செவிமடுத்த திரு காசிநாதர் அவர்கள் பெரிதும் மன மாற்றம் அடைந்தார்கள்.

பிறகு திரு பரமாசாரியார் அவர்களை மதுரைத் திரு மடம் சென்று திரு காசிநாதச் செம்மல் அவர்கள் சேவித்தார்கள். அங்கு நடந்த நிகழ்ச்சிகள் பெரு வியப்பளிப்பனவாகும்.

திரு இளவரசர் அவர்களை அவர்கள் தந்தையார் அவர்களுடன், பலகை (Planchet) வழியாகப் பேச வைத்தார்கள் குரு முதல்வர் அவர்கள். முதலில் திரு இளங்கோ அவர்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. தமது ஆருவது ஆண்டில் தம்தந்தையார் தம்மை அருகில் அமர்த்திக்கொண்டு, விராலிமலைத் திருப்புகழை இசைநலம் பொழியப் பாடிக்காட்டிய அவ்வாறே தம்மைப் பாடுமாறு கூறியிருந்த நிகழ்ச்சியைத் தந்தையார் பலகை வழிப் பேச்சில் நினைவூட்டிய போது, தாம் மயிர் சிலிர்த்து உளங் கசிந்து நின்ற செய்தியை திரு துரையவர்கள் சொன்னுர்கள். நானும் மயிர்க் கூச்செறிந்தேன்.

அந்தத் திருப்புகழை அப்போது பாடும்படி திரு தந்தையார் தம் அருமை மகனுரைப் பலகை வழியாகவே கேட்டார்கள், அப்படியே திரு காசிநாதரவர்கள் பாடினுர்கள். ஆனுல் அது தந்தையார் பயிற்றுவித்ததற்குச் சிறிது மாறுபட்டிருந்தது. 'நான் சொல்லிக்கொடுத்தது போலப் பாடவில்லையே; இனி பாடுவாய். நான் உன் உள்ளிருந்து பாடுவிப்பேன்' என்னும் தந்தையாரின் அருளுரை பலகை வழி வந்தபோது திரு காசிநாதர் மெய்ம் மறந்துபோனுர்கள். அத்திருப்புகழைத் திருச்சியில்அன்று பாடிக்காட்டி, என்னையும் அங்கு அப்போது அருகமர்ந்திருந்தவர்களையும் மெய்சிலிர்க்கச் செய்தார்கள் திரு துரையவர்கள்.

தம்மைச் சிவபூசை எடுத்துக் கொள்ளுமாறு தம் காலஞ்சென்ற தந்தையார் அவர்கள் பலகை வழியாக

அறிவித்ததாகவும், அதே நேரத்தில், தந்தையார் அவர்களோடு ஆவி உலகில் இருந்த காலஞ் சென்ற சங்கீத வித்துவான் பூச்சி சீனிவாச அய்யங்கார் அவர்களும், சைவம் வளர்த்த பாண்டித்துரைத் தேவர் அவர்களின் பேரன் என்றதற்காக, இளவரசர் அவர்கள் சிவபூசை செய்ய வேண்டும் என்று பலகை வழியாகவே எடுத்துரைத்த செய்தியையும், அவ்வாறே தாம் அருள்திரு சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரியர் அவர்களால் முறையாக சமய தீட்சை, விசேடத் தீட்சை முதலியவற்றைப் பெற்று, சிவபூசை எழுந்தருளிவிக்கப் பெற்றதையும், திரு துரையவர்கள் சொன்னார்கள். திருவருட்பாங்கினை வியந்து விம்மிதமுற்றேன். தந்தையார் அவர்கள் மறைந்த நிலையில் இருந்து கொண்டு, பலகை வழியாக கட்டளையிடாமல், இருந்திருந்தால் திரு துரைமகனார் அவர்கள், சிவபூசை ஏற்றுக் கொண்டிருப்பார்கள் என்று எண்ணுதற்கில்லை. அப்படியே வேறு காரணங்களால் சிவ பூசை ஏற்றிருந்தாலும், அதை இப்போது பற்றோடும் நெறியோடும் செய்துவருவது போலச் செய்யும் ஆர்வம் கொண்டவர்களாக இருப்பார்களா என்பதும், சிவபூசை செய்வதின் விளைவாக இப்போது அடைந்துள்ள அருளுணர்வை அடைந்திருப்பார்களா என்பதும் ஐயமே.

தாம் சிவபூசை செய்வது தம் தந்தையாருக்கு நல்லதென்று தந்தையாரே பலகைவழி தெரிவித்தார்கள் என்பதையும் திரு காசிநாதச் செம்மல் சொன்னார்கள். சிவபூசை செய்வது தாமும் தம் முன்னோரும் உயிர் நலம் பெறுவதற்கு எவ்வளவு இன்றியமையாதது என்னும் உண்மையும் இந்நிகழ்ச்சிகளால் தெளிவாகின்றது. ஊன் உடலைக் கடந்த நிலையில் நிலவியவராய், நுண் உடம்பில் தோன்றுதுறையும் தந்தையார் அவர்களும், பூச்சி சீனிவாச அய்யங்கார் அவர்களும் உயிர்களின் ஆன்ம முன்னேற்றத்திற்கு சிவபூசை செய்வது எத்துணை முக்கியமானது என்று கருதினார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். எனவே, சிவபூசை செய்வது, நம் ஒவ்வொருவருக்கும், எவ்வளவு இன்றியமையாதது என்பதும் விளக்கமாகின்றது.

இதற்கு முன்பே திரு இளைய மன்னர் அவர்களோடு நான் கலந்து பழகியிருக்கின்றேனாயினும், திருச்சியில் உணர்வொத்து உரையாட வாய்த்த வாய்ப்பினைப் போல் இதற்கு முன்பு நான் பெற்றேனில்லை. அவர்களுடன் சொல்லாடுதலால், எவரும் திருவருளுணர்வும், ஆழ்ந்த மொழிப் பற்றும், பரந்த பண்பாட்டு உள்ளமும் பூண்பர் என்பது என் நம்பிக்கை. இந்த அரிய வாய்ப்பினை எனக்கு நல்கிய சைவர் மாநாட்டினை வாழ்த்தி, திரு காசிநாதத் துரை அவர்களது அன்புக்கும் பல்லாண்டு கூறுகிறேன்.

மதிப்புரை

ஸ்ரீ சிவகேசாதி பாதாந்த வருணன ஸ்தோத்திரமும் ஸ்ரீ தசஸ்லோகி தோத்திரமும் என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். ஸ்ரீ ஆதி சங்கராச்சாரிய சுவாமிகள் வட மொழியில் செய்தவற்றைத் தமிழில் சிறந்த பாடல் மூலம் இயற்றியவர் கவியரசு வித்துவான் திரு கு. நடேசக் கவுண்டர் B. O. L., ஆவர். கேசாதிபாதாந்த வர்ணனைப் பாக்களாக 29 அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தமும் தசஸ்லோகிப் பாக்களாக 10 எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தமும் இந்நூலில் உள்ளன. பாக்கள் யாவும் மிகச் சிறந்த முறையிலுள்ளன. யாவரும் வாங்கிப் படித்துப் பயனுறலாம். விலை குறிக்கப் பெறவில்லை. வேண்டுவோர் கவியரசு வித்துவான். கு. நடேசக் கவுண்டர், 84, காந்திபுரம் நான்காவது வீதி, கோயம்புத்தூர்-12. என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

(அம்பை)

நன்னெறி காத்த நாதனர்

சைவப்புலவர் சி. குமரேசப்பிள்ளை

(முன் இதழ் தொடர்ச்சி)

அங்கு தத்தன் என்ற மெய்க் காவலன் காத்து நின்றுன். வரவுரியதல்லாக் காலத்தில் போகவுரியதல்லா இடத்தில் புகவருகின்ற முத்த நாதனைக் கண்டான்; தடைசெய்ய முற்பட்டான். அடியாரைத் தடைசெய்யலாகாதென்ற அரசனுணை அவனைத் தடுத்தது. தடைப்படுத்தவும் வேண்டும். ஆகவே முத்த நாதனை நோக்கிச் சதுராக "இடைதெரிந்தருள வேண்டும் துயில்கொளுமிறைவன்" என்றுன். சமயம் அறிந்து செல்ல வேண்டும் அரசர் தூங்குகின்ருரென்றுன். ஒருவர் பூசை செய்யும் காலம், உண்ணும் காலம் துயில்கொள்ளும் காலங்களில் அவரைக் காணச் செல்லுதல் தகுதியானதல்ல. அதனை நாகரீகமாக எடுத்துரைத்தும் மனங்கொண்டானில்லை முத்த நாதன். "யானவர்க்கு உறுதி கூற நின்றிடு நீயும்" என்று அவனை யும் நீக்கி உள்ளே புகுந்தான். அரசன் மஞ்சத்தில் துயில் வதையும் அரசி அருகிருப்பதையும் கண்டான், கண்டும் மஞ் சத்தை நெருங்கினுன். தேவி கண்டு திடுக்கிட்டெழுந்து "அண்டர் நாயனுர் தொண்டர் வந்துளார்" எனக் கூறி அரசரை எழுப்பினுர் "அண்டர் நாயனுர் தொண்டர்" எனக் கேட்ட அளவிலே செங்கையைக் குவித்துக்கொண்டே யெழுந்து மஞ்சத்தினின்று இறங்கி முன்னே சென்று முறைப்படி வணங்கி நின்று.

"மங்கலம் பெருக மற்றென் வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற தென்கொலோ"

என்று கூறினுர்.

எனக்கு மங்கலம் உண்டாகும்படியாகவும் என் நல் வாழ்வு வந்து சேர்ந்தது போலவும் தாங்கள் இங்கு வந்து சேர்ந்த காரணம் யாது என்ருர். அடியார்களது உள்ளக்

கருத்தை அறிந்து ஏவல் செய்கின்றவராதலின் கருத்து யாது என வினவினுர். "ஆவதறிவார் அறிவுடையார்" என்பது வள்ளுவர் வாக்கு. உண்மையறிவினையுடையவர்கள் வருங்காலத்தை உய்த்துணரும் ஆற்றலுடையார். மெய்ஞ்ஞானம் பெற்ற ஜீவன் முக்தராகிய நாயனுர் தாம் கொண்ட வாய்மை நெறியை விளக்க வேண்டும் காலமும் உலக வாழ்வின் இறுதிக் காலமும் வந்துவிட்டமையை உணர்ந்தே உரையாடுகின்ருர் என்பதைச் சேக்கிழார் நயமாகப் புலப்படுத்துகின்ருர்.

மங்கலம் பெருக நல்வாழ்வு வந்தணைந்ததென்ன என்னும் தொடரே "மங்கலம் மிக்க சிவ வாழ்வு வந்து சேர்ந்தது போன்ற" என்ற பொருளையும் தருகிறது மேலும் மங்கலம் என்பது ஒரு இலக்கணச் சொல்; அமங்கலமான சொல்லைச் சொல்லுதல் தகுதியன்று என நீக்கித் தகுதியான மங்கலச் சொல்லால் சொல்லுதலை 'மங்கலம்" எனக் கூறுதல் இலக்கண வழக்கு. எனவே ' மங்கலம் பெருக வாழ்வு வந்தணைந்த தென்ன" என்பது எனக்கு உலக வாழ்வில் அமங்கலம் உண்டாக என் வாழ்வு அணைந்தது போல இங்கு எழுந்தருளிய காரணம் யாது என வினவியதாயும் அமையும். பதிலிறுக்கிருன் முத்த நாதன்.

"உங்கள் நாயகனுர் முன்னம் உரைத்த ஆகமநூல் மண்மேல்
எங்கு மில்லாத தொன்று கொடுவந்தேன் இயம்ப"

என்ருன்.

உங்களது சிவபெருமானுர் முற்காலத்தில்உரைத்ததும் இவ்வுலகில் எங்கும் கிடைக்கப் பெருததுமாகிய சிறந்ததோர் ஆகம நூலைக் கொண்டு வந்தேன் என்று கூறினுன். அவன் உள்ளம் இரண்டுபட்டிருப்பதுபோலச்சொல்லும் இரு பொருள்பட அமைகிறது உங்கள் நாயகனுர் என்பது உள்ளத்தில் வஞ்சம் புலப்பட எழுந்த சொல். நமது நாயகனுர் என்று கூருது உங்கள் நாயகனுர் என்று கூறியது அவன் சிவப்பற்று இல்லாதவன் என்பதைக் காட்டும். மேலும் அச் சொல்லே மிக்க பற்றையும் உரிமையையும் காட்டுகிற ஒரு சொல்லாகவும் அமையும். ஒரு தாய் தன் மகனிடம்

தன் கணவனைப்பற்றிக் குறிப்பிடும்போது உன் தந்தை எனக் கூறுவதை உலக வழக்கில் காணலாம், நாவுக்கரசர் சீர்காழிக்குச் சென்றபோது பிள்ளையார் அவரை நோக்கி "உங்கள் தம்பிரானுரை நீர் பாடீர்'' என்கிறார். (நா. பு- 186) திருஞான சம்பந்தர் சீர்காழியில் பாணரைச் சந்தித்த போது ''இசையாழ் உங்கள் இறைவருக்கு இங்கியற்றும்'' என்றார். (திருஞா.-பு 134).

''மண்மேல் எங்குமில்லாத'' என்பது உலகில் எங்கும் கிடைக்கப்பெறாத அருமையினையும் தான் வைத்திருப்பது போன்ற கத்தியை மறைத்த ஆகமம் உலகில் கிடைக்கப் பெறாதது என்பதையும் புலப்படுத்துகிறது. முத்த நாதன் கூறிய உங்கள்', 'மண்மேல்' எங்குமில்லாதது. எனும் இரு சொற்களும் விடம் கலந்த நெய்யடிசில்போல வெளிவருகின்றன.

கேட்ட நாயனர் 'பேறினி இதன் மேலுண்டோ பிரானருள் செய்த மாறில் ஆகமத்தை வாசித்தருள் செய்ய வேண்டும்' என்றார்.

இதைவிட நான் அடையக்கூடிய பேறு என்ன இருக்கிறது? சிவபெருமான் அருளிய இதை, சித்தாந்தச் செந்நெறிக்கு மாறுபடாத அரிய நூலை வாசித்து அருள் செய்ய வேண்டும் என்றார். மேலும், பேறினியுண்டோ? இனி நான் அடைய வேண்டுவது யாதுளது? மாறு இல்-மறுபிறவியும் இல்லை. ஆகமத்தை வாசித்தருள் செய்ய வேண்டும். 'நான் விரைவில் வீடு பேறடைய ஆகமத்தை வாசிக்க' என்றார்.

நான் இதைவாசிக்க வேண்டுமானால் ''நாறுபூங்கோதை மாது தவிரவே நீயும் நானும் வேறிடத்திருக்க வேண்டுமென்பது'' முத்தநாதன் மறுமொழி. மணமிக்க மலர் மாலையை அணிந்த இப்பெண் இவ்விடமிருந்து செல்ல நீயும் நானும் தனி இடத்திலிருக்க அருள் செய்வேன் என்பது நீறு பூசிய தவ வேடத்தனது சொல். இம்மாது-நாறு பூங்கோதை தவிர-மணமிக்க மலர் மாலையைச் சூடுவது

நீங்கும் படியாக—நானும் நீயும் வேறிடத்து—நீ மேலிடத்தும் நான் கீழிடத்தும் இருத்தல் வேண்டும் என்பது நீறு பொதிந்த நெருப்பு.

உடனே அரசன் திருமகள் போல அருகே இருந்த மனைவியாரை அந்தப்புரத்திற்குத் திருமகளை அப்புறம் விலக்குவது போலப் போக ஏவி, புனைந்த தவவேடத்தானை ஆசனத்தின் மீது இருத்தித் தான் தரையிலிருந்து இனி வாசித்து அருள் செய்யும் என்றார். முத்தநாதனும் எண்ணம் கைகூடும் தருணம் வந்தமையை எண்ணியவனாகி

'கைத்தலத் திருந்த வஞ்சக் கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று புரிந்தவர் வணங்கும்
போதில்
பத்திரம் வாங்கித் தான்முன் நினைந்தஅப் பரிசே செய்ய
மெய்த்தவ வேட மேமெய்ப் பொருள்எனத் தொழுது
வென்றார்

'தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய'—என்ன செய்தான் எனக் கூறவில்லை. செப்பரு நிலைமையை எண்ணி வந்தான்—சொல்ல முடியாத அவனது எண்ணத்தை படைகரந்த புத்தகக் கவளியை ஏந்தினன் என்பதாலும், மை பொதி விளக்கு என்ற உவமையாலும், விளக்கிக் காட்டியதாலும் அவன் நினைத்தது எது என்பதை உய்த்துணரலாமன்றோ? அவ்வாறே செய்தான். இதுவும் ஒரு மங்கல வழக்கு. தூய தவ வேடத்தோடு நின்று செய்கின்றதாகிய செய்யத்தகாத செயலைக் கூறுதல் தகுதியன்று. ஆதலால் 'நினைந்த அப்பரிசே செய்ய' எனக் குறிப்பிட்டார். நாயனார் போரைப் பற்றியோ, கொலையைப் பற்றியோ வருணிப்பதில் எந்தக் காவிய ஆசிரியருக்கும் இளைத்தவரல்ல என்பதை இயற்பகையார் புராணமும், கண்ணப்பர் புராணமும் காட்டும். இவ்விடத்தில் அச்செயலைக் கூறுதது தவ வேடத்திற்கும், ஆண்மைக்கும் பொருந்தாத செயல் பற்றி, ஏனாதி நாயனார் புராணத்தும் இவ்வியல்பைக் காணலாம். ஏனாதி நாயனாரோடு போர் செய்து வெல்ல முடியாத அதிசூரன், சிவனடியாரைச் சிவன் எனவே திருநீற்றிற்கு வணக்கம்

செலுத்தும் ஏனாதியின் இயல்பை அறிந்து தானும் திரு நீறு அணிந்து கேடகத்தால் மறைத்துக் கொண்டு போர் செய்கின்றான். போர் நடுவில் கேடகத்தை விலக்கினான். திருநீற்றைக் கண்டார் ஏனாதியார். இவரது நெற்றியில் காணாத திருநீற்றைக் கண்டேன். இவரது உள்ளக் குறிப் பின் வழி நிற்பேன் எனக் கூறி, படையைக் கையிலேந்தி யவாறே செயலழிந்து நிற்க, அதிசூரன் தன் கருத்தை முற்று வித்தான். ஆசிரியர் கொன்றான்' என்று கூறாது 'முன் நின்ற பாதகனும் தன் கருத்தை முற்று வித்தான்' என்றார்.

அவ்வாறே முத்தநாதனும் தான் நினைத்த அப்பரிசே செய்ய நாயனார் 'மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள்' எனத் தொழுது வென்றார்...............

நாயனார் தன் வேதனையால் அலறவில்லை. கொலைஞன் மீது காழ்ப்புக் கொள்ளவில்லை. 'மெய்த்தவ வேடமே மெய்ப் பொருள் எனத் தொழுதார்;' எனவே வென்றார்.

முத்தநாதன் கருத்தை முடித்தான். ஆகவே அவன் வெற்றி பெற்றான். உயிரிழந்தார் நாயனார், ஆகவே நாய னார் தோற்றார் என்றல்லவா கூற வேண்டும்?

'அவ்வாறு கூறாது மெய்ப் பொருளார் வென்றார் எனக் கூறுவானேன்'? மெய்ப் பொருளாரை சுந்தர மூர்த்தி நாய னார் வெல்லுமா மிக வல்ல மெய்ப் பொருளுக் கடியேன்' எனக் குறிப்பிடுகின்றார்: மெய்ப் பொருளார் 'வரை நெடுந் தோளால் வென்று மாற்றலர் முனைகள் மாற்றினார்.' முத்த நாதன் அவரோடு பன்முறை போர் செய்து தோற்றான். இந்த வெற்றிகளை எண்ணி சுந்தரர் வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளார்க் கடியேன் என்று குறிப்பிட்டிருப்பாரோ? அத்தகைய வெற்றிகளைப் பெற்ற மெய்ப் பொருளாருக்கு சுந் தரர் அடிமையாகி யிருக்கமாட்டார். சுந்தரர் போற்றிய வெற்றி அதுவாக இருக்க முடியாது. பின் எது?

முத்தநாதனது வஞ்சக எண்ணம் முற்று பெற்றது. அதனை வெற்றியென்று கூறுதல் இயலுமோ? போரின்றி வெற்றியா? ஒருவர் பணிய இன்னொருவர் குத்துவது

என்பது வெற்றியா? ஆகவே உலகியல் முறையில் பார்க்கும்போதும் முக்தநாதன் வென்றான் எனக் கூறுதல் பொருந்ாது. போரில்லாத காரணத்தால் அவனைத் தோற்றான் எனக் கூறுதலும் பொருந்தாது. நாயனாரை வென்றார் எனக் கூறுவதும் பொருந்தாது. பின் எங்கே வென்றார்?

போரில் வெற்றி பெறவில்லை. 'தொழுது வென்றார்' பகைவன் எதிர்க்கும் போது எதிர்க்கும் உணர்ச்சி தான் யாருக்கும் வரும் இங்கே கை எதிர்க்க வில்லை, தொழுதது. அஞ்சியா? அலறியா? இல்லை. 'மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்' எனக் கூறித் தொழுதது.

நாயனார் வேத நன்னெறி வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு வாழ்ந்தனர் அதாவது தவவேடமே மெய்ப்பொருள் எனக் கொண்டு நன்னெறியில் சிறக்க வாழ்ந்தார். ஆகவே காதலால் ஈசர்க்கன்பர் கருத்தறிந்து ஏவல் செய்பவர்; திரை செய்நீர்ச் சடையான் அன்மர் வேடமே சிந்தை செய்பவர்; தங்கள் நாயகருக்கன்பர் தாளலால் சார்பொன்றில்லாதார். இது அவரது இயல்பு; அவரது நிலை. ஆகவே சிவனடியார்களுக்கு அரசரது அரண்மனை அந்தப்புரம் வரையிலும் எக்காலத்தும் செல்லத் தடையில்லாதிருந்தது. பகைவனாகிய முத்தநாதனுக்கு நகருக்குள் நுழைய முடியுமா? அரண்மனை காவலாளர் உள்ளே விடுவார்களா? அந்தப்புரத்தை எட்டிப் பார்க்க இயலுமா? நாயனார் தான் வணங்கியிருக்கக் கூடுமா? நகர் நுழைந்தது மெய்த்தவ வேடம், அரண்மனை நுழைந்ததுவும் அதுவே. தடை பல கடந்ததும், தத்தனாலும் தடை செய்ய முடியாதிருந்ததும் அத்தவ வேடமே. நாயனார் கண்டு வணங்கியதும் அத்தவ வேடத்தையே. அந்த மெய்த்தவ வேடத்தையே குத்திய பின்னும் காண்கின்றார். குத்தியவன் பகைவன். அவன் ஒரு கையில் படை; உடம்பில் சிவ வேடம். படை ஏந்திய கையோடு எதிர்க்க வேண்டும். சிவ வேடத்தைத் தொழுதல் வேண்டும். யாது, செய்வது அங்கே போர்.

பெரிய புராணமே ஒரு போர்நூல் அகப் போர் நூல். உலகம் வாழ்வு இரண்டிற்கும் போர். சிவானுபூதி பெற்ற சீவன் முக்தர்களது உலக வாழ்வைக் கூறுவது பெரிய

புராணம். அவர்களின் ஆன்மீக வாழ்விற்கும் உலக வாழ் வாழ்விற்கும் இடையே போர் நிகழ்கிறது. உலக வாழ்வை சிதைப்பதா? சிவத்தொண்டிற்கு ஊனம் விளைவிப்பதா? என்ற நிலை ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஏற்படுகிறது. உலகப் பற்றை உதறித் தள்ளி சிவத்தொண்டில் உறைப்புக் கொள்கிறார்கள். மனைவியைவிட சிவத்தொண்டைப் பெரி தாகக் கொண்டார் இயற்பகையார். மகனைவிடப் பெரிதாகக் கொண்டார் சிறுத்தொண்டர் தனது வாழ்வினும் பெரிதாகக் கருதினார் ஏனாதியார் தனது வீரத்தினும் அரசு முறையினும் பெரிதாகக் கருதினார் மெய்ப்பொருளார். ஆகவே படை யோடு எதிர்க்காமல் மெய்த்தவ வேடத்தை மெய்ப்பொரு ளெனக் கொண்டு தொழுதார். கொள்கையால் வென்றார். 'புலனைந்தும் வென்றான் வீரமன்றோ வீரம்' இத்தகையவர் 'வீரம் நம்மால் விளம்பும் தகையதோ' என்கிறார், சேக் கிழார்.

முத்த நாதனைக் கண்டபோதே அவன்மீது சிறிது ஐயம் தத்தனுக்கு. அவன் உள்ளே புகுந்தபோதே மனத்தை அந்தப்புரத்தில் வைத்தான் தத்தன். அரவம் கேட்டதும் உள்ளே பாய்ந்தான்; நாயனார் குருதி சோரவீழ்ந்து கொண் டிருப்பதைக் கண்டு முத்த நாதனை வாளினால் எறிய லுற்றான்.

'தத்தா நமர்' என்று தம் நீண்ட கையால் தடுத்துக் கொண்டே கீழ் விழுந்தார் மெய்ப்பொருளார்.

'தத்தா அவனைக் கருதாதே' தவவேடத்தைக் கருது. அவர் நமர் என்றார்.

நமர்! தன்னைக் குத்திக் கொன்ற பகைவன் நமர்! எத்தனை உயர்ந்த பண்பு. தன்னைச் சிலுவையில் அறைந்த பகைவருக்காக வருந்தினார் ஏசு.

"'ஆண்டவனே நோக்கி அறியாது செய்த இவர்களை மன்னியும்'' என்றார். சிறந்த உள்ளம் காந்தி மகானைச் சுட்டான் கோட்சே 'இவனை ஒன்றும் செய்யாதீர்' என்று கூறிக் கொண்டே கீழ் விழுந்தார் காந்தியடிகள் மிகச் சிறந்த பண்பாடு'' தன்னைக் குத்திய பகைவன் 'நமர்'

நம்மைச் சார்ந்தவர் என்கிருர் மெய்ப்பொருளார் போற்றத் தகுந்தவை இம்மூவர் செயலும். ஆனுல் ஏசு கருத்து இறைவனே' அறியாதுசெய்தஇவர்களைமன்னியும்' என்ருர். செய்தவன் அறியாது தவறு செய்தான். என்று எண்ணினுர். ஆகவே அவன் ஆண்டவன் தண்டனைக குள்ளாவான் என்று கருதினுர். மன்னியும் என வேண்டினுர். காந்தியடிகளும்தம்மைக்கொல்லத் துணிந்தவனைக் காக்கக் கருதினுர். ஆனுல் மெய்ப்பொருளாரோ தம்மைக் கொல்லத் துணிந்தவனை நமர் என அணைத்துக் கொண்டார். அவனைத் துன்பம் செய்தவனுகக் கருதவில்லை

உறவாகப் போற்றிக் காக்கின்ருர். உள்ளத்தின் உயர்வு எங்கே இருக்கிறது? தெய்வீகம் எங்கே மலருகிறது. எண்ணி யெண்ணித் துதிக்கவேண்டிய நிலையல்லவா அது. அந்த நிலையை வேறு எவ்வாறு விளக்குவது. பேச முடியுமா ''பேசவொண்ணுப் பெருமையில் பிறங்கினுர்'' என்றல்லவா சேக்கிழார் பேசுகிருர்.

''......தத்தா நமரே' எனச் சொல்லி வானுலகம் பெற்றவன் சேதிபன் மெய்ப்பொருளாம் என்று பேசுவரே' என்கிருர் நம்பியாண்டார் நம்பிகள்.

இராஜராஜ சோழன் தஞ்சை கோவிலில் மெய்ப்பொருள் நாயனுர் படிமத்தின் கீழ் '':தத்தாநமரேகாண் என்ற மெய்ப்பொருள் நாயனுர்'' என்று எழுதி வைத்தான்.

'தத்தா நமர்' என்பதில் அமைந்த அற்புதம் தான் என்னே!

'நமர்' என்ற சொல்லைக் கேட்டதுமே தத்தன் தானும் முத்த நாதனை—அல்ல—மெய்த்தவ வேடத்தைத் தலையினுல் வணங்கி நான் செய்ய வேண்டுவதென்ன வென்று அரசரை நோக்கி கேட்டான். அரசர் எம்பிரான் அடியார் போக மீதிடை விலக்கா வண்ணம் கொண்டு விடுநீ, யென்ருர் எம்பிரான் அடியாரை வழியில் யாரும் தடுக்காதவாறு கொண்டு சென்று விடு நீ என்ருர்

'ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு' என்பது ஏசுவின் வாக்கு. சிறந்த சால்பு. இன்னு செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்—என்ன பயத்ததோ

சால்பு''—என்று துன்பம் செய்தாருக்கும் நன்மை செய்ய ஒரு படி மேலே செல்கிறுர் வள்ளுவர் தனக்கு துன்பம் செய்தவனை தாம் மட்டும் 'நமர்' என அணைத்தால் போதுமா? தத்தனிடமிருந்து மட்டும் காத்தது போதுமா? தம் நாட்டவர் யாருமே தீமை செய்யக் கூடாது எனக் கருதுகிறுர். ஆகவே வழியில் யாரும் தடுக்காதவாறு கொண்டு சென்று விடு என்ருர். சால்புக்கு வள்ளுவர் வகுத்த எல்லையினையும் விஞ்சி நிற்கின்றது இத் தெய்வீகப் பண்பு

அரசர் கட்டளையைத் தலைமேற் கொண்ட தத்தன் கையில்வாளையும்ஏந்திக்கொண்டுமுத்த நாதனைஅழைத்துச் சென்ருன். இச் செய்தியை அறிந்த மக்களெல்லாம் அரசனை தீங்கு செய்த பொய்த்தவன் தனனைக் கொல்வோம் என்று சூழ்ந்து வர, தத்தன் அவர்களை எல்லாம் ''இத்தவன போகப் பெற்றது இறைவன தாணை என்று கூறி விலக்கி ஆள் சென்றடையாத கானகம் கொண்டு சேர்த்துத் திரும்பினுன்.

அரசன் உயிரோ. சோர்ந்துகொண்டிருக்கிறது, முத்த நாதனைக் காத்த சொல்லைக் கேட்கவென்று உயிரைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருக்கிறுர் அரசன். அவர் முன்பு சென்று தத்தன் 'செய்தவ வேடங்கொண்டு வென்றவற்கு இடையூறின்றி விட்டனன்'' என்று கூறினுன். 'வெற்றி பெறுவது வஞ்சனை யல்ல தவவேடமே' என்று வெண்கொடிகளும் ஆடின என முன்பு கூறப்பட்டது

தத்தனும் 'தவ வேடமே வென்றது' எனக் குறிப்பிடுகின்ருன். அவ்வாறு கூறிய தத்தனை நோக்கி இன்றெனக்கு ஐயன் செய்தது யார் செய்ய வல்லார்' என்று அவனைப் பார்த்து மிக்க கருணை கொண்டார். எத்தகைய அன்பினுலும் செய்ய முடியாத காரியத்தைத் தத்தன் செய்தான். மெய்ப் பொருள் நாயனுரின் உண்மை இயல்பை அறிந்த மெய்க் காவலாளன் அவன். ஆகவே அவனுக்கு அவ்வாறு செய்ய முடிந்தது. எனவே அவனை வேலைக்காரன் என்றும் கருதாது 'ஐயன்' என அழைக்கின்ருர் நாயனுர்.

அதன் பின் தமது அரசியல் துணைவர்களையும் அன்புடையசுற்றத்தார்களையும்அழைத்துச் சொல்லுபவராகி விதியினுலே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர் என்ருர்.

ஆகம விதிப்படி அதாவது திருநீறு முதலான சிவ வேடத்தின்மீது அன்பின் திறத்தைச் சோர்வு படாமல் காத்து வாருங்கள் என்றார். மேலும் விதியினாலே இங்கு நடந்தவைகள் விதிப்படி நடந்தன. ஆகவே சிவனடியார் மீது வெறுப்புக்கொள்ளாதீர் என்று கூறியவராகி 'புரலவர் மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.

இறக்கின்ற காலத்தில் ஒருவர் எண்ணுகின்றபடி மறு பிறவி அமையும் என்பர். வாழ்வு முழுவதும் சிந்திக்கிற எண்ணங்களே புலனைந்தும் பொறிகலங்கி நெறி மயங்கி ஐமேலுந்தி அறிவழிந்திட்ட போது அருப்பி நிற்கும். ஆகவே இருக்கின்ற காலத்துப் புரலவர் மன்றுளாடும் பூங்கழல் சிந்தையுள் வரவேண்டுமாயின் வாழ்க்கை முழுதுமே பூங்கழல் சிந்தையில் பழக்கப் பட்டிருத்தல் வேண்டும்.

''நெஞ்சம் என்பதோர் நீள்கயம் தன்னுளே
வஞ்ச மென்பதோர் வான் சுழிப்பட்டு நாள்
துஞ்சும் போழ்து நின்னுமத் திருவெழுத்
தஞ்சும் தோன்ற அருளும் ஐயாறரே,

என்று திருநாவுக்கரசு பெருமான் இறக்கின்ற காலத்தில் அஞ்செழுத்தும் தோன்ற அருள் செய்ய வேண்டுமென வேண்டுகினார்.

எவ்வடிவத்திலே நாள்தோறும் கருத்திலமைத்து வணங்குகின்றோமோ அவ்வடிவத்திலேயே இறுதிக் காலக் காட்சியை மாதொரு பாகனார் தருகிறார்.

''யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே
மாதொரு பாகனார்தாம் வருவார்''

என்பது சித்தியார் வாக்கு. சிவபெருமானை நாயனார் தில்லை மன்றுளாடிய திருவடிவத்திலேயே வணங்கி வந்தார் என்பது முன் தேடிய மாடு நீடு செல்வமும் தில்லை மன்றுள்ளாடிய பெருமான் அன்பர்க்காவன ஆகும் எனக் கொண்டதால் விளங்கும். இறுதிக் காலத்திலும் அப்பூங் கழலையே சிந்தை செய்தார். செய்யவே மாதொரு பாகர் அவர் தம்மை முன்கண்ட தில்லையுள் ஆடிய திருக்கோலக் காட்சி கொடுத்து திருவடியுள் சேர்த்துக்கொண்டார். அத் திருவடி தொண்டர்க்கே அல்லது தேவர்களுக்கும் அரிது ''யாரேனும் தன்னடியார்க் கணியான் தன்னை, யமார்களுக்கு மறிவரிய அளவிலானை'' எனக் கோயில் திருத் தாண்டகம் கூறுகிறது.

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்—ஊற்றமாம்
ஊன்றும் மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முக்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

என்பது பெரியார் வாக்கு.

திருவடியடைந்து கும்பிட்டிருத்தலே சைவத்திறம் கூறும் முக்தி. அதுவே சாயுச்சிய பதவி ஞானத்தால் கைகூடுவது அது. குஞ்சித்த சேவடியும் கும்பிட்டே யிருப்பர் என்பது சித்தியார். அத்தகைய பெரு நிலையைப் பெற்ருர் நாயனூர்.

மெய்ப்பொருள் நாயனூர் வேத நன்னெறியாகிய ஆகமத்தின் முடிந்த முடிவாகிய சிவனடியாரைச் சிவன் என்னவே வழிபடும் சீரிய நெறியினைத் தலைக்கொண்டு அந்நெறி உலகத்தில் சிறப்படைய வாழ்ந்தார். ஆகவே தன்னைக் கொன்ற பகைவனது தவவேடத்தையும் "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" எனத் தொழுதமையால் மெய்ப் பொருள் வேந்தர் எனவும், அந்நெறியிலேயே இறக்கும் வரையிலும் நின்று இறக்கும் தருவாயிலும் 'விதியினூலேயே பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர்' என்று கூறித் தமக்குப் பின்னும் அந் நன்னெறி நிலைத்து நிற்க வகை செய்தமையை நன்னெறி காத்த சேதி நாதனூர் என்றும் சேக்கிழார் பெருமையோடு பாராட்டுகிருர்.

உற்பத்திக் கிரமம்

(மா. ப. தியாகராாசன் பீ.ஏ.,)

தீப்பெட்டி இல்லாத முன் காலத்தில் இரண்டு சிக்கி முக்கிக் கற்களைத் தட்டி நெருப்புப் பொறிகளை உண்டாக்கித் தீ வளர்ப்பர். விறகுக் கட்டையில் தீ அடங்கிக் கிடப்பதாகவும் அது ஒன்ருேடொன்று சேர்த்து கடையப் பெற்ருல் தீப்பிடித்து எரியும் என்று கூறுவர். 'விறகில் தீயினன்' என்று அப்பர் பெருமான் பாடியுள்ளார். ஐம் பூதங்களில் ஒன்ருகிய மண்ணம்சமாக உள்ள கல்லோ மரமோ ஒன்று கூடி அதனுள் அடங்கிக் கிடக்கும் அக்கினியை வெளிபடுத்துகிறது. அதேபோல் தண்

ணீர் நீராவியாக மேலே சென்று மேகமாக நிலவி இருக் கையில் அவை ஒன்றோடொன்று மோதப்பட்டு மின்னல் இடி மின்சார சக்தி உண்டாகிறதைக் காண்கிறோம். எனவே தண்ணீரில் மின்சக்தி அடங்கிக் கிடப்பதாகக் கண்டு, மின்சக்தி உற்பத்திக்குத் தண்ணீர்த் தேக்கங்களை பயன் படுத்துகிறார்கள். ரேடியோ மூலம் நாம் கேட்கும் ஒலிகள் எங்கோ எழுப்பப்படும் ஒலி அலைகள் மின் அலை களாக மாற்றப்பட்டு, ஒலி அலைகளாகி அவை மீண்டும் வேறொரு இடத்தில் மின் அலைகளாகவும் ஒலி அலைகளாக வும் மாற்றப்பட்டுக் கேட்கிறோம். இந்த மூன்று சக்தி களும் ஒரே பூதத்தில் அடங்கிக் கிடப்பதால் அவை ஒன் றில் ஒன்றாய் மாற்றப்படும் இயல்புடையனவாக ஆகின் றன. புயலில் காற்றின் மோதலைக் காண்கிறோம். அப் போது மழை பெய்கிறது. அதேபோல் ஆகாயம் இரு கூறாக நின்று இயங்குவதை நாம் அறிய முடியவில்லை. எனினும் உயிர் சக்தி ஆகாயத்தினின்றும் எழுபப்படு கிறதென ஊகிக்கலாம். அதே போல் அதற்கும் மேலான நுண்ணிய ஐம் பூதங்களையும் அடக்கி அவையே தானே யாயும் விளங்குபவன் இறைவன். அவனின்றும் வெளிப் படுவது அறிவு சக்தியாகும். இதையே இறைவனினின் றும் இறைவி சக்தியாக பிரிந்து மீண்டும் தவம் கிடந்து கூடி ஒரு நன்மையை உலகுக்களிக்கின்றனள் என்று புரா ணக் கதைகள் விளக்குகின்றன கற்பகவல்லி அம்மை யார் மயிலுருவாய்ப் பூஜித்து கபாலியைப் பெற்றாள் என திருமயிலைத் தல வரலாறு உணர்த்துகிறது காஞ்சியில் சக்தி தழுவக் குழைந்த ஏகம்பவாணனைக் காணலாம்.

'ஒருருவாயினை மானுங்காரத்து ஈரியல்பாய் ஒரு விண் முதற் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள்' என்று திரு ஞானசம்பந்தர் பாடியிருப்பதைக் காணலாம். சிதாகாசம் இறைவனுடைய ஆட்டத்தினால் வெளிப்படும் அறிவாகா யம் என்னலாம். அவ்வறிவு சக்தி பூதாகாசத்தினின்றும் வெளிப்படும் உயிர் சக்தியுடன் கூடி பல்வேறு உருவ பேதங்களில் தங்கி இயங்குவதையே பல்வேறு சிருஷ்டி யினங்களாகக் காண்கிறோம். தாவரங்களில் ஈரறிவாக வும். புழுக்களில் மூவறிவாகவும் விலங்கினங்களில் நான்

கறிவு ஐயறிவுப் பிராணிகளாகவும் மனித உருவத்தில் ஆறறிவோடு கூடியும் அச்சக்தி வெளிப்படுவதைக் காண லாம்.

அப்பொருளைப் பிரமம் என்றும் சிவம் என்றும் பல வாருக அழைக்கினும் அது இரு கூருய் அதனுள் இருந்த சக்தி வெளிப்படும்போது அதைப் பராசக்தி என்று கூறு கிருேம். சிவசக்தி ஆட்டத்திஞல் பல்வேறு சக்திகள் தோன்றி முககியமாகச் சித்சக்தி தோன்றி ஏனைய ஐம் பூத விகாரத்திஞல் ஏற்படக் கூடிய உருவ பேதங்களின் இயக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது. நாம் மூன்று வித சக்திகளைக் காணலாம். கிரகங்களாகிய கோளங்கள் சுற்றி வருகின்றன. ஆஞல் அவை வளர்வதில்லை. தாவ ரங்கள் வளர்கின்றன. ஆஞல் நகர்வதில்லை. உயிரினங்கள் வளர்ச்சியையும் அசைவையும் பெறுகின்றன. எனவே வளர் சக்தியையும் இயங்கும் சக்தியையும் ஒன்று கூட்டி நிற்பது உயிர் சக்தியாகும். உயிர சக்தி தாஞகவே இந்த ஒருமைப்பாட்டை உண்டாக்க முடியாத தன்மையில் இறை சக்தி அல்லது அறிவு சக்தியின் துணையை நாடி நிற்கிறது. 'உயிர் சுதந்திரமிலி' என்றும் அறிவிக்க அறி யும் தன்மையுடையது உயிரென்றும் கூறுவர்.

ஓருருவாய் மூல ஆதியில் நிற்கும் பரம்பொருள் இவ் வாருக இரு கூருய் நின்று விரிதலிஞல் உலகத்தை விரிந் ததென்றும் பிரபஞ்சம் என்றும் கூறுகிருேம். இதையே ஆண்டுதோறும் திருக்கோயில்களில் செய்யும் திருக்கலி யாண வைபவம் உணர்த்துகிறது. இதஞல் பெறப்படுவது மேன்மையடையவும் தன்னுள்ளிருக்கும் ஆற்றல்வெளிப் படவும் ஒன்று படுதல் வேண்டும். "ஒன்று பட்டால்

உண்டு வாழ்வே" என்று எளிதில் கூறிவிடுகிறேம். உயிர் சக்தி அறிவு சக்தியின் துணை கொண்டு பல பிரிவுகளாகப் பிரிந்து ஒன்று படுதலினுல் இவ்வுலகம் இயக்கப் படுகிறது. அறிவு வினைவென இரு கூருகி 'அறிவுதன் வினைவொடுங் கூடில் உயிர் ஜக முளவாம்; பிரிவில் பேதா பேதங்க ளின்றி நெறியுறத் தானே தன்னிடத்திருக்கும்' எனப் போர்வாழ் ஆறுமாமுகன் எனக்கிசைத்தான் என்று சிதம் பர சுவாமிகள் பாடியருளியுள்ளார். இப்படியாக விரிந்து இயங்கும் ஐம் பூதத் தத்துவத்தைப் பின் விளக்குவாம்.

மதிப்புரை

திருநாவுக்கரசர் ஏகாதசமாலை : இப்பிரபந்தம், நாற்பது பிரபந்தங்கள் கொண்ட பதிேைராம் திருமுறையில் நாற்ப தாவது ஆகும். திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி அருளிச் செய்தது. பதிெைரு சந்தப்பாடல்கள்; அப்பர் சுவாமிகளுடைய புகழைக் கூறுவன சுவையுடைய இந்தப் பாடல்களுக்கு விளக்கமாக யாரும் உரை எழுதவில்லை இப் போது சைவப் புலமையும், அப்பர் சுவாமிகள் போன்ற பக்திப் பெருக்கும் சேவைப் பண்பும் உடைய செட்டியாரவர் கள் உரை எழுதியிருக்கிறர். பதவுரையும் விளக்கமும், மேல் விதப்புமாக உரை அமைந்துள்ளது திருமுறை மேற் கோள்களும் பொதிந்து உள்ளன பெரிய எழுத்தில் நன்கு அச்சிடப்பட்டுள்ளது அருஞ் சொல்லகராதியும் உடையது அற நிலைய இலாகா ஆணையராயிருந்த உத்தண்டராம பிள்ளையவர்களின் அணிந்துரையோடு. திருப்புகலூர் தேவஸ் தான வெளியீடாக 1961இல் இது அச்சிடப்பட்டது தேவஸ் தானத்தார் பிரதிகளை அப்பர் இல்லத்திற்கு நன்கொடையாக அளித்திருக்கிறர்கள் 112 பக்கமுள்ள இப்புத்தகத்தை ஒரு ருபாய் விலை கொடுத்து ஆசிரியரிடம் பெற்றுக்கொள்ளலாம். கொடுக்கிற தொகை அவ்வில்லத்துக்கு உதவுவதாகிய பெரும் புண்ணியமாகும். உரையைப் பயில்வோர் சிறந்த சைவ சமய அறிமுகம் பெறுவார்கள். (ஆசிரியர்)